முருகப்பெருமான் துணை

**மகான் பிரும்மமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.10.2021, செவ்வாய்கிழமை

1. பிரம்மஞானியே அரங்கா போற்றி
பிரணவப் பிரியனே தேசிகா போற்றி
வரமென பிலவ தரிவை திங்கள்
வழங்குவேன் இருபானாற்திகதி குசன்வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 26ம் நாள், 12.10.2021 செவ்வாய்கிழமை)
2. வாரமதில் பிரும்ம முனிவர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பார் எங்கும் அரங்கனின் தர்மம்
பழுதின்றி வளரவளர மாற்றம் காணும்
3. காணவே அற்புதங்கள் நிகழ்த்த
கருணை வடிவாக வந்த அரங்கன்
ஞானமே உலகம் தனை மாற்றும்
நல்ல தர்மமே உலகம் தனை காக்கும்
4. காக்க வந்த மகாசக்தியாகவும்
கந்தவேலனின் ஞான சபையாகவும்
ஆக்கமோடு அரங்கன் படைத்த ஓங்காரக்குடிலே
அகிலத்தை மாற்றம் செய்யும் அமைப்பாகும்
5. ஆகவே மக்களை நோக்கி
அரங்கன் தருகின்ற உபதேசமே
ஜகத்தினை ஞானவழிக்கு மாற்றும்
சிறப்பான தொண்டர்களை உருவாக்கும்
6. ஆக்கமுடன் கலியுக மக்களே
அரங்கன் வாழும் குடில்நோக்கி வர
பக்குவமும் பரோபகார தயவும் பெருகி
பண்புள்ள ஞானவான்களாக மாறுவர்
7. மாறுதலை செய்யவந்த அரங்கனே
மண்ணுலகின் சிறந்த ஞானியாகும்
ஆறுமுக அரங்க ஞானி தயவையும்
ஆறுதலையும் பெற்ற மக்களே ஞானிகள் ஆவர்
8. ஞானிகளாக மக்களை வதைக்கின்ற
நடப்பின் மக்கள் ஆட்சி முடிவுக்கு வந்து
ஞானிகள் ஆளுகின்ற வல்லமையான
ஞான ஆட்சியாக உலகம் மாற்றம் பெறும்

9. உலகமாற்றம் நிகழ்த்தவந்த முருகனே
உண்மைபட அரங்கனுன் சக்தியாகி
உலகை வழிநடத்தி வருதலுற
உண்மையான தருமமான சமூக மாற்றம்

10. மாற்றமதும்  சன்மார்க்கமாக மாறியே
மண்ணுலகம் உண்மையானவர்கள் நிரம்ப
ஆற்றல்பட ஞானவான்களை தேர்வு செய்து
ஆறுமுகப்பெருமானை வணங்குகின்ற தலைமை

11. தலைமை எங்கும் உருவாகி
தரணியில் ஞானசித்தர் காலமாகி
உலகமெல்லாம் ஞான ஆட்சி மாறும்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—